<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 295/2010 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | வேலுசாமி | நாள் | 06.09.2024 |
| தகப்பனார் பெயர் | ஆறுமுகம் | | |

**<u>வாதி தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

8) இவ்வழக்கில் நான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி பதிலுரையை எனக்காகவும், 1, 3, 4 பிரதிவாதிகளுக்காகவும், சேர்த்து தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். ஆனால், தற்போது பிரிந்துவிட்டோம். என் பாட்டனார் எந்த வருடம் இறந்தார் என்றால், 1994 ம் வருடத்தில் இறந்தார். தேதி, மாதம் சரியாக நினைவில்லை. என் பாட்டனார் இறந்த சமயத்தில் அவருக்கு என்ன வயதிருக்கும் என்றால், சுமார் 80 வயது இருக்கும்.

9) என் பாட்டனார் இறுதி காலத்தில் அவரை யார் பராமரித்தார்கள் என்றால், என் சித்தப்பா சித்துராஜ் பராமரித்து வந்தார். என் பாட்டனார் இயற்கையாக இறந்தாரா என்றால், ஆமாம். உடல் நிலை சரியில்லாமல் இருந்தார். திடீரென இறந்துவிட்டார். என் பாட்டனார் இறுதிகாலத்தில் படுத்தப்படுக்கையாக இருந்தார் என்றால், இல்லை. அவர் இறுதி வரை நடமாடிக்கொண்டிருந்தார். என் தந்தை ஆறுமுகம் விபத்தில் இறந்ததற்காக மின் வாரியத்திலிருந்து அவரது பணிகொடை வாரிசுதாரர்களுக்கு எவ்வளவு வந்தது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. என் தாயாருக்குத்தான் தெரியும்.

10) என் தந்தை இறந்த சமயத்தில் என் பாட்டனாருக்கு எவ்வளவு சொத்து இருந்தது என்றால், மூன்று இடங்களில் சொத்து இருந்தது. என் தந்தையின் இறப்பிற்கு எவ்வளவு இறப்பு பணிகொடை வந்தது என்பது குறித்தே எனக்கு தெரியாத நிலையில், என் முதல் விசாரணை சாட்சியத்தில் மேற்படி இறப்பு பலன்களை வைத்து, குடும்ப சவரட்சனை மற்றும் வாதியின் சவரட்சனை செய்ததாக நான் சொல்வது தவறானது

என்றால், சரியல்ல. மேற்படி மூன்று சொத்துக்களில் உயில் படி பாத்தியப்பட்ட ஒரு சொத்தை விற்பனை செய்து, அந்த தொகையை எங்கள் தாயாரிடம் கொடுத்துவிட்டோம். அந்த தொகையை கொண்டுதான் சவரட்சனைகள் செய்யப்பட்டது. எந்த வருடத்தில் மேற்படி உயில் படி பாத்தியப்பட்டதாக நான் சொல்லும் நிலத்தை விற்பனை செய்தோம் என்றால், 1994 ல் விலைபேசி முன் பணத்தொகையை பெற்றுக்கொண்டோம். கடந்த 2000 ம் வருடத்தில் விற்பனை செய்துவிட்டோம்.

11) அவ்வாறு மேற்படி சொத்தை 1994 ம் வருடத்தில் விலைபேசியதாகவோ, கடந்த 2000 ம் வருடத்தில் மேற்படி சொத்தை விற்பனை செய்ததாகவோ குறிப்பாக பதிலுரையில் சொல்லியுள்ளோமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி சொத்தை விற்றதற்கான ஆவணம் எதையேனும் எங்கள் தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால், இல்லை. 1994 ம் வருடத்தில் மேற்படி சொத்து விலைபேசப்பட்டு, முன் பணமாக எவ்வளவு தொகையை பெற்றுக்கொண்டோம் என்றால், ரூ.50,000/–ஐ முன் பணமாக பெற்றுக்கொண்டோம். அவ்வாறு முன்பன தொகை பற்றிய விவரத்தை என் பதிலுரையிலோ, முதல் விசாரணை பிரமாண சாட்சியிலோ சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

12) வாதிக்கு எவ்வளவு சவரட்சனை செய்து, திருமணம் செய்யப்பட்டது என என் பதிலுரையிலோ, முதல் விசாரணை பிரமாண சாட்சியிலோ சொல்லியுள்ளேனா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. 1, 3 பிரதிவாதிகள் யாருடைய பராமரிப்பில் உள்ளதாக என் பதிலுரையில் சொல்லியுள்ளேன் என்றால், என் சகோதரர் ராஜீ பராமரித்து வருவதாக நாங்கள் சொல்லியுள்ளோம். இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்னிட்டு வாதிக்கும், எங்களுக்கும் எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லை என்றால், சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பிருந்தே பேச்சுவார்த்தை இல்லை.

13) தற்போது 1, 3 பிரதிவாதிகளை யார் பராமரித்து வருகிறார் என்றால், என் சகோதரர் ராஜீதான் தற்போதும் பராமரித்து வருகிறார். என் தாயாரான 1ம் பிரதிவாதியும், என் சகோதரரான 3ம் பிரதிவாதியும் தனியாக ஒரு வழக்கறிஞரை வைத்து தற்போது எதிர்வாதம் செய்வது வருவது எனக்கு தெரியுமா என்றால், தெரியும். என் சகோதரர் ராஜீ தற்போது எங்களுடன் சேர்ந்துதான் வழக்கு நடத்துகிறார்.

14) தற்போது நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாண பத்திரிக்கையில் நான் யார் யாருக்கு சாட்சி சொல்வதாக சொல்கிறேன் என்றால், எனக்காகவும், 3, 4 பிரதிவாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். என் பதிலுரையில் குறிப்பாக மேற்படி உயில் சொத்தை விற்றது குறித்து சொல்லவில்லை என்றால், அது பற்றி பிரச்சனை இல்லாததால், குறிப்பாக சொல்லவில்லை. மேற்படி விற்பனை செய்யப்பட்ட உயில் சொத்தின் சர்வே எண்ணை பதிலுரையில் குறிப்பிட்டு, சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. என் சகோதரர் மோகன் ராஜீக்கும், என் தாயாருக்கும் வேறு ஏதேனும் வழக்கு உள்ளதா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

15) என் தாயார் 1ம் பிரதிவாதி இவ்வழக்கில் புது வழக்கறிஞரை வைத்து தனியாக என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என தெரிந்துகொண்டேனா என்றால், இல்லை. வாதியின் திருமண செலவிற்காக கடன் வாங்கியதாக சொல்லும் நிலையில், எவ்வளவு கடன் வாங்கினோம் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. என் தாயாருக்குத்தான் தெரியும். வாதியின் திருமணத்திற்கே நான் செல்லாத நிலையில், திருமணத்தின்போது வாதிக்கு எவ்வளவு சவரட்சனை செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். என் தாயாருக்கும், என் சகோதரருக்கும்தான் தெரியும்.

16) தற்போது நான் எனக்காகவும், என் சகோதரர் 4ம் பிரதிவாதிக்காகவும் சேர்ந்து சாட்சியம் அளிக்கும் நிலையில், மேற்படி கேள்விகளுக்கு என் சகோதரரை கேட்டால்தான் தெரியும் என நான் சொல்வது ஏற்புடையதல்ல என்றால், சரியல்ல.

வாதிக்கு கடந்த 1996ம் வருடத்தில் திருமணம் ஆகும் வரை நாங்கள் அனைவரும் கூட்டாகத்தான் இருந்தோம் என்றால், இல்லை. நான் தனியாக வசித்து வந்ததேன். என் சகோதரர்களும், வாதியும், என் தாயாரும் கூட்டாக வசித்து வந்தனர்.

(வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.